சிறகுகள் முறியும் . . .

ஆண்கள் உடம்பெல்லாம் வயிறாக, மார்புச் சதை தொங்க ஊதக்கூடாது என்று ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று எண்ணிக்கொண்டாள் சாயா.

இப்படி மனத்தளவில் பல சட்டங்களைச் சாயா உருவாக்கி யிருக்கிறாள்.

1. ரோமம் இல்லாத வழவழத்த மார்பு உள்ள ஆண்கள் மணக்கக் கூடாது என்றொரு சட்டம்.
2. வெற்றிலை சாப்பிட்டுச்சாப்பிட்டுத் தகரம்போல் நசுங்கிக்கிடக்கும் பற்களை உடைய ஆண் முத்தமிடக் கூடாது என்றொரு சட்டம்.
3. ஆவலுடன் மனைவியின் கண்கள் ஒரு பொருளின்மீது படியும் போது பர்ஸைக் கெட்டியாக மூடிக் கொள்ளும் கணவனின் பர்ஸ் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்றொரு சட்டம்.

இப்படி எத்தனையோ.

அத்தனை சட்டங்களும் அமுலாக்கப்படும் பட்சத்தில் வெகு வாகப் பாதிக்கப்படப்போகும் ஒருவன் அவள் முன் அமர்ந்து, மலைமாதிரி உடம்பில் வேர்வை பெருக, “ரஸம் ஒரே சூடு” என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

“நிதானமா சாப்பிடலாமே என்ன அவசரம்?” என்றாள் சாயா.

“என்னது?” என்று அந்த “எ..ன்..ன..து”வை வாயில் அரைத்தவாறே அவன் கேட்டான்.

ஒதுங்கிப் போகும் பெண் நாயைப் பார்த்து உறுமும் ஆண் நாயின் உறுமலில்கூட இன்னும் மென்மை இருக்கும் என்று நினைத்தாள் சாயா.

“அம்மா, சாதம் ஜாஸ்திம்மா” என்று சிணுங்கினான் சேகர்.

"என்னடா ஜாஸ்தி ராஸ்கல்? அரிசி என்ன விலை விக்கறது? உதை விழும். சாப்பிடுடா."

சேகரின் கன்னங்கள் இரண்டும் அழுகையை அடக்கியதால் பிதுங்கின. சாயா மனத்தில் அவசரச் சட்டம் ஒன்றைத் தீர்மானித்தாள்.

மென்மையே இல்லாத ஆண்களுக்குக் குழந்தையே பிறக்கக் கூடாது என்று கட்டாய வாஸக்டமி செய்துவிடவேண்டும். பாஸ்கரன் பெண் பார்க்க வரும்போதே பருமன்தான். தமிழ்ப்பட 'ஹீரோ' க் களைப் பார்த்துப்பார்த்துப் பழகிவிட்டதாலோ என்னவோ சற்றே ஸ்தூல சரீரம் ஆண்மைக்கு அழகு என்றொரு கற்பனை சாயாவுக்கு.

அம்மா மெல்ல சொன்னாள்: "மாப்பிள்ளைக்கு நல்ல வேலை. ஆனால் கொஞ்சம் ஸ்தூல சரீரம். நம்ப சாயா கொடி மாதிரி ஒல்லி. பொருத்தம் இல்லையே?" என்று இழுத்தாள்.

சந்துரு மாமாவுக்குக் கோபம் வந்துவிட்டது.

"என்ன அத்திம்பேர், இவள் உளர்றா? நல்ல ஆரோக்கியமா இருக்கான் பையன். ஜுரத்திலே அடிபட்டவன் மாதிரியா ஆம்பிளை இருப்பான்? இவள் மட்டும் என்ன? பிள்ளை கிள்ளை பெத்தா பருத்துடுவா" என்று கத்தினார்.

சாயாவுக்குப் பரிபூரண சம்மதம்.

அவள் மனத்தில் பாஸ்கரன் ஸ்டைலாக தொந்தி குலுங்க நடந்து, காதல் டூயட் பாடிக்கொண்டிருந்தான்.

சாயா-பாஸ்கரன் – என்ன பெயர்ப் பொருத்தம்!

அகத்து சாஸ்திரிகள் சொன்னார்: "ஹாங்! பெயர்ப் பொருத்தத்தைப் பார்த்தேளா? ராமர் ஸீதை ஜோடீன்னா இது!"

"சாயா, அந்த மாங்காய் ஊறுகாய் போடேன். ஒரு மாசமா போட்டுக்கவே இல்லை."

மாங்காய் ஜாடியைத் திறந்தாள். பஞ்சுப்படுக்கை விரித்தாற் போல் பூஞ்சைக் காளான் பூத்துக் கிடந்தது.

"ஐயையோ. . ."

"என்ன? கெட்டுப் போயிடுத்தா?" என்றான் பாஸ்கரன்.

தலை அசைத்தாள்.

"பணத்தைக் கொட்டி வாங்கினது. உனக்கு ஆனாலும் கவனம் போறாது."

உதட்டைக் கடித்துக்கொண்டாள் சாயா. அவள் தவறுதான். ஜாடியைக் குலுக்கிவிட வேண்டும் என்று ஞாபகமே இல்லை. "அத்தனை

உப்பும், காரமும் எண்ணெய்யும் வீண். பணத்தோட அருமை தெரிஞ்சால்தானே?" என்று கத்திவிட்டுக் கை அலம்பப் போய்விட்டான் பாஸ்கரன்.

உப்பும், காரமும், எண்ணெய்யும்... ஹூம்! எங்கேயும் போய்விடவில்லை. அத்தனை உப்பும் காரமும் சேர்ந்துதான் நெஞ்சில் பற்றிக் கொண்டு எரிகிறதே? எண்ணெய் முகத்தில் வழிகிறதே?

"அம்மா, எனக்கு ஸ்கூலுக்குப் போகக் காசு குடும்மா."

"உன்னை மறந்தே போயிட்டேண்டா கண்ணா. இந்தா, சமத்தா போ, என்ன?"

சாப்பிட்ட இடத்தைச் சுத்தம் செய்யும்போது, பாஸ்கரன் உடை மாற்றிக் கொண்டிருந்தான். இஸ்திரி போட்ட மடிப்பெல்லாம் மறைந்து போய் தொளதொளத்த பான்ட்தான் ஒரு வாரமாய். ஸ்தூல தேகத்துக்கு இன்னும் இத்தனை ஒழுங்கில்லாமல் காட்டியது.

"வேற பான்ட்டே இல்லையாக்கும்?"

"எல்லாம் இது போறும். எத்தனைன்னு வண்ணானுக்கு அழறது?"

சட்டம்: கருமிகளுக்குக் கல்யாணமே ஆகக்...

"ப்ளாஸ்கில் காப்பி விட்டாச்சா?"

சட்டத்தைப் பாதியில் நிறுத்தி "ம்" என்றாள்.

"டிபன் கட்டியாச்சா?"

"ம்."

எல்லாவற்றையும் சுமந்து கொண்டுபோக வேண்டும்.

அங்கே ஹோட்டலில் வாங்கிச் சாப்பிட்டால் செலவுதானே?

முதலில் அவள் பெருமைப்பட்டாள். என் கை ருசி அவருக்கு விசேஷம் என்று காரியாலயத்திலிருந்து வந்ததும் கேட்பாள்:

"வெண் பொங்கல் பிடிச்சுதா?"

"ம்."

"இன்னிக்குச் சக்கரைப் பொங்கல் எப்படி? எதிர்வீட்டு மாமிக்குக் கூட வாசனை அடிச்சுதாம்."

"நன்னாத்தான் இருந்தது. நெய் ஜாஸ்தி. பார்த்து செலவு பண்ணு."

எல்லோருக்குமேவா புகழ வந்துவிடுகிறது? அப்படித்தான் அவள் நினைத்தாள்.

ஒரு நாள் அவனிடம் கேட்டேவிட்டாள்.

இரவு இதமாய் அந்தரங்கங்களைத் திறந்த வெளியில் காட்ட வாய்ப்பைத் தந்தது. திறந்திருந்த ஜன்னல் வழியாகக் காற்றின் சுகத்தோடு, பல சுகந்தங்களும் வீசி மனத்தைப் பஞ்சாக்கிப் பறக்க வைத்தது.

மெல்ல அவனை நெருங்கி, அவன்மேல் சாய்ந்துகொண்டு அவன் சுருள் முடியில் – எண்ணெய் வழியும் அதில். ஒருவனைப் பிடித்துவிட்டால் எண்ணெய்த் தலைமயிர்கூடப் பரவாயில்லையோ? பிடிக்காவிட்டால் இரு பற்களிடையே இருக்கும் இடுக்குகூட குகை வாயாய்த் தெரிகிறது – கைகளை அலையவிட்டாறே அவன் காதோடு அவள் ரகஸியமாய்க் கேட்டாள்.

"நான் ஒன்னு கேட்கட்டுமா?"

அவனுக்கு அரைத் தூக்கம். நெஞ்சைச் சுண்ட வைக்கும் "எ... ன் ... ன... து?" கூட அன்று கேட்கவில்லை.

அவன் தோளில் கன்னத்தைப் பதியவைத்துக்கொண்டு அவள் குழறினாள்.

"நான் பண்ணித் தர டிபன்னா உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும். இல்லையா? ஆபீஸிலே யாரும் கேலி பண்ணறது இல்லையா?"

அவன் சுருக்கமாகப் பதில் சொன்னான்.

"நீ நன்னாத்தான் சமைக்கறே. சாமானை வீணடிச்சுடறே. இருந்தாலும் ஹோட்டல்லே சாப்பிடறதைவிட இது லாபம்தான்."

அவன் தோள் நெருப்பாய் எரிந்தது. கேசத்தில் விளையாடிய கைகள் துண்டிக்கப்பட்டவை போல் வலித்தன.

அவள் நகர்ந்து அவள் படுக்கையில் படுத்துக்கொண்டாள். அந்த மாதிரி சமயங்களில் விசித்திரக் கற்பனைகள் அவளுக்கு வருவதுண்டு.

சிவாஜி கணேசன் இதையே சரோஜாதேவியிடம் ஒரு படத்தில் கூறினால் அவள் என்ன செய்வாள்? ஜன்னல் அருகே போய் "வில்லம்பு பட்ட புண்" என்று ஒரு பாட்டுப் பாடுவாள். தனக்கோ "மீனாக்ஷி மேமுதம்" என்று கீர்த்தனைகள்தான் வரும். ஆனந்த பைரவி ஆலாபனை செய்யலாம். சோகம் ஒழுகும். சிரிப்பு வந்துவிடும் கற்பனையிலேயே.

கற்பனைக்கு நன்றி.

எத்தனை சட்டங்களை ஆணித்தரமாயும், அழுத்தமாயும் படைக்க முடிகிறது?

"நான் கிளம்பறேன் சாயா."

"ம்."

"அந்த மாங்காய் முழுசும் கெட்டுப் போயிடுத்தான்னு பார். இல்லாட்டா மேலாக அலம்பி எடுத்துடு."

“சரி.”

அவன் சென்றுவிட்டான்.

சாயா சாப்பிட உட்கார்ந்தாள். சேகர் மீதம் வைத்த சாதத்துடன் கொஞ்சம் சாதம் விட்டுப் பிசைந்தாள். வற்றல் குழம்பில் பிசைந்து கொண்டபோது அம்மா ஞாபகம்தான் வந்தது. என்னமாய்ப் படுத்தி யிருக்கிறாள் அவளை!

வற்றல் குழம்பு தட்டில் விழுந்தாலே, தட்டு பறந்து முற்றத்தில் போய் விழும். கையை உதறிக்கொண்டு எழுந்துவிடுவாள். “எனக்குப் பிடிக்காததை நீ எப்படிச் சமைக்கலாம்?” என்று கத்துவாள்.

பிடிக்காதது!

சிறையில் கைதிக்குக் கஞ்சி விடும்போது “ஆஹா, எங்கே கத்தரிக் காய் பஜ்ஜி? வெறும் கஞ்சி பிடிக்காதே” என்றானாம்!

அம்மாவை அலைக்கழித்ததற்குத்தான் இந்த தண்டனையோ?

ஒருதடவை பள்ளியிலிருந்து வந்ததும் “என்னம்மா டிபன்” என்று கத்தினாள்.

“இட்லி.”

தட்டில் இட்லி விழுந்ததும் “மிளகாய்ப் பொடி” என்றாள்.

மிளகாய்ப் பொடி வரவில்லை. சட்னி வந்தது.

“மிளகாய்ப் பொடி இல்லை” என்றாள் அம்மா.

பாவாடையை உதறிக்கொண்டு எழுந்துவிட்டாள் சாயா.

அப்புறம் அரை மணிக்குள் அம்மா வறுத்து இடித்துவிட்டாள்.

“இதை அப்பவே இடிச்சுத் தொலைக்கறதுதானே?”

“இடிச்சிருக்கலாம். இன்னிக்கு என்னவோ ஒரே மார் வலி.” ‘குபுக்’ கென்று நெஞ்சை அடைத்தது சாதம். அம்மா! கரகரவென்று கண்களில் நீர் பெருகியது. எச்சிற் கையோடு உட்கார்ந்துகொண்டே இருந்தாள். நெஞ்சம் கேவியது. கல்யாணம் நிச்சயமானதும் எவ்வளவு கற்பனைகள் அவள் செய்தாள்!

எச்சிற் கையை உதறிக்கொண்டு எழுந்தாள்.

அரிவாள்மணையில் காய்கறி நறுக்கும்போது கையை வெட்டிக் கொள்வது போல் ஒரு கற்பனை. அவன் ஒரு முறுவலுடன் பாண்டேஜ் கட்டுவான். அவன் பளாரென்று ஒரு நாள் அறைவான் கன்னத்தில். சீ, சீ, கன்னம் வேண்டாம். முகம் அசிங்கமாகிவிடும். அறைவது முதுகில். இவள் தப்பே ஒன்றும் இருக்காது. பிறகு அவள் விம்மிவிம்மி அழுவாள்.

அவன் "இந்தக் கையா உன்னை அடித்தது?..." இத்யாதி இத்யாதி. இப்படி ஒரு கற்பனை. எல்லாவற்றிலும் அவள் அவனுக் காகக் கஷ்டப்படுவது போலும், அவன் உருகுவது போலும். ஒரு ஹிந்துப் பெண்ணுக்கு எவ்வளவெல்லாம் கற்பனை செய்ய அனுமதிக்கிறதோ அவ்வளவு மட்டுமே அவள் கற்பனை செய்தாள். அண்ணா வாங்கித் தந்திருந்த சில புத்தகங்களில் இருந்த பிரகாரம் அவள் கற்பனை போனபோதுகூட அவன் பருத்த வயிறு எவ்வளவு அருவருப்பாகத் தோன்றலாம் என்று அவள் எண்ணவில்லை. குஷ்டரோகியுடனேயே வாழ்க்கை நடத்திய ஹிந்துப் பெண்குலத் தோன்றல் அல்லவா அவள்? கையை அலம்பும்போது அவள் மனம் ஒரு சட்டத்தைப் பிறப்பித்தது. சட்டம்: 'காம சூத்ரா' படிக்காத பெண்கள் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது.

வாசற்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

கதவைத் திறந்தாள்.

அடுத்த தெரு மாலதி நின்றுகொண்டிருந்தாள். வெய்யிலில் வந்ததால் வேர்வை பரவ நின்றாள்.

"என்ன மாமி, உள்ளே கூப்பிடமாட்டீங்களா?"

"கூப்பிடாம என்ன? இப்படி வெய்யில்லேயா வரது? அதுவும் இப்படி இருக்கறபோது? என்ன விஷயம்?"

"ரெண்டு ப்ளவுஸ் தைக்கணும் மாமி."

மென்மையான, உயர்ந்த வேலைப்பாடு செய்த ரவிக்கைத் துண்டு களைத் தந்தாள் மாலதி.

"விலை ஜாஸ்தி இருக்குமே?"

"பத்தொம்பது ரூபாய் மீட்டர். வேண்டாம்னா அவர் கேட்கிற தில்லை. சீமந்தத்துக்குப் பட்டு ரவிக்கை போட்டுண்டா உடம்பு கசகசத்துப் போய்விடுமாம்."

"அப்படீன்னா அடுத்த வாரத்துக்குள்ளே வேணும்னு சொல்லு."

"ஆமாம். தையல் கூலி வழக்கம் போல ரெண்டு ரூபாய்தானே?"

"கூலிக்கு என்ன இப்போ?" என்று மெல்லச் சொல்லிவிட்டு ரவிக்கைத் துண்டுகளை மீண்டும் அழகு பார்த்தாள்.

"நூல் விலையெல்லாம் ஏறிப் போயிடுத்து. நாலணா வித்த நூல் கண்டு இப்போ எட்டணா. அடுத்த வாரமே வேணும்னு வேற சொல்றாய்."

"அப்படீன்னா மூணு ரூபாய் தந்துடறேனே மாமி. வரட்டுமா?"

"செய். உடம்பு ஜாக்கிரதை."

மாலதி போய்விட்டாள்.

மூன்று ரூபாய் அதிகமோ? இருக்கட்டுமே, அவளால் தர முடியாதா என்ன? "சாயா மாமி மூன்று ரூபாய் கேட்டார்" என்று போய்ச் சொல்லுவாளோ? சொல்லட்டுமே! வேலைக்குக் கூலி. தையற்காரனிடம் கொடுத்தால் ஐந்து ரூபாய் கறந்துவிடுவான்.

மூன்றும் மூன்றும் ஆறு ரூபாய். அந்தத் தமிழ்ப் படம் பார்க்கலாம். அதில்தான் கதாநாயகன் சாகிறான். செத்துத் தொலையட்டும் பாவி! வாழ்ந்து என்ன ஆகப் போகிறது?

விதம் விதமாய்த் தைப்பது என்றாலே சாயாவுக்குத் தனி ஆர்வம். திராக்ஷைக்குலையைத் தலையில் கவிழ்த்தாற்போல் கரிய கேசச் சுருள்களோடு மூன்று பெண்கள் அவள் நாத்தனாருக்கு.

"சரோஜா, என்கிட்டே தாயேன். நான் தைச்சுத்தரேன் குழந்தைகளுக்கு."

"தைத்துக்கொடேன் மன்னி. உனக்கும் சீக்கிரம் பெண் பிறக்கும்".

பிறக்குமா? பூச்செண்டுபோல் ஐந்தாறு குழந்தைகள் வேண்டுமென்று அவளுக்கு ஆசை.

"அம்மா, எனக்கு அரை டஜன் குந்தையாவது வேணும்மா."

"போடீ, அசடே" என்பாள் அம்மா.

பத்து வருஷங்களில் அவளுக்கு சேகர் மட்டும்தான். அதில்கூடச் சிக்கனமோ?

கடையில் வரும் பத்திரிகைகளில் உள்ள மாதிரிகளையெல்லாம் பார்த்து அவள் தைத்தாள் அந்தக் குழந்தைகளுக்கு.

பாஸ்கரன் காரியாலயத்திலிருந்து வரும்போது ஒரு நாள் மாலை தைத்துக் கொண்டிருந்தாள்.

"யாருக்கு இவ்வளவும்?" என்றான்.

"சரோஜா குழந்தைகளுக்கு. அழகா இல்லை?"

"சும்மாத்தானே தைக்கிறே?"

"ஆமாம். என் ஆசைக்கு."

அடுத்த மாதம் வீட்டுச் செலவுக்கென்று வந்த ரூபாயில் பத்து ரூபாய்த் துண்டு. அவள் விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள்.

"நூல் ஊசின்னு வீண் செலவு பண்ணுவாய். அதுதான் குறைச்சுத் தந்தேன்."

இன்னொரு முறை சரோஜா துணிகளைத் தந்தபோது 'நேரமே இல்லேடி!' என்றாள்.

“போ மன்னி, புளுகாதே, மத்தியானமெல்லாம் என்ன செய்யறா யாம்?”

“சரி. தைக்கறேன். ஆமாம், சரோஜா இதைத் தையற்காரன்கிட்டே தந்தா எவ்வளவு கேப்பான்?”

“அஞ்சு ரூபாய்க்குக் குறையாது. ஏன் மன்னி?”

“அப்போ அதிலே பாதி எனக்குத் தந்துடேன். நான் தைக்கறேன். நூல் செலவு ஆறது பார்.”

‘சடக்’ கென்று தலையை நிமிர்த்தி அவளைக் கூர்ந்து பார்த்தாள் சரோஜா. பெரிய ஆபீஸரின் மனைவிக்கு ஏன் இந்தச் சின்னத்தனம் என்று நினைத்தாளோ? அந்தப் பார்வையின் தாக்குதலை இன்னும் சாயா மறக்கவில்லை. விழிகளை விரித்து, உதடுகள் சற்றே பிரிய, புருவங்களை உயர்த்தி “இவ்வளவுதானா நீ?” என்பது போல் ஒரு பார்வை. அதன் பின் ரத்தினச் சுருக்கமாய்ப் பதில்.

“சரி, தரேன் மன்னி.”

அன்றிலிருந்து அவள் காசு வாங்கிக்கொண்டு தைத்தாள். மாலதி தந்த துணியை அலமாரியைத் திறந்து அதனுள் வைத்தாள். மறுநாளே தரவேண்டிய ரவிக்கைகள் இரண்டும், குழந்தைச் சட்டைகள் இரண்டும் இருந்தன. தையல் மிஷினைத் திறந்து தைக்க உட்கார்ந்தாள்.

ரவிக்கைகள் இரண்டும் எதிர்வீட்டு ரஞ்சிதத்துடையவை. மாதம் இரண்டு ரவிக்கைகளாவது தைக்க வேண்டும் அவளுக்கு, “உடுத்திக்கவும், சாப்பிடவும்தானே மாமி உழைக்கிறோம்?” என்பாள் அடிக்கடி.

தான்?

அவளுக்கே தெரியவில்லை. அவள் எதற்காக, யாருக்காக வாழ்கிறாள்? நினைத்தவுடன் சட்டையைக் கழற்றிப் போடுவது போல், உயிரை எடுத்துவிட முடியாத இயலாமையினால்தான் அவள் வாழ்வு தொடருகிறதா?

புடவை, நகையில் அவளுக்கு இருந்த ஆர்வம் எல்லாம் மறைந்து பத்து வருடங்களாகிவிட்டன. எந்தப் புடவையைப் பார்த்தாலும் சரிகையின் அழகும், வண்ணச் சேர்க்கையின் நயமும் கண்ணில் படுவதில்லை. அவளையும் அறியாமல் கை, விலைச் சீட்டைத்தான் தேடுகிறது.

ஆனாலும் வருடா வருடம் தீபாவளிக்குப் பட்டுப் புடவை வாங்காமல் அவள் விடமாட்டாள். புடவையின் மீது உள்ள ஆர்வத்தினால் அல்ல அது.

“பட்டுப்புடவை வேணுமா?” என்பான் அரை மனத்தோடு பாஸ்கரன்.

"ஆமாம்".

இருப்பதிலேயே விலை உயர்ந்த புடவையை எடுத்துவிட்டுத் திரும்பும் வழியில், பர்ஸில் உள்ள பணத்தை எண்ணி, செலவழித்த பணத்துக்காக அவனை ஏங்கவைக்கும் அந்தக் கேவலமான பழி வாங்குதலுக்காகவே அவள் பட்டுப்புடவை வாங்கினாள். "வேண்டும்" என்று கேட்டு வாங்கும் அளவு தன்மானம் தனக்குச் செத்துவிட்டதா என்று தன் மனத்தின் குறுகலை எண்ணி அவள் வியந்ததுண்டு. ஆனால், அவன் காசை பலவந்தமாகச் செலவழிக்க வைத்துவிட்ட குரூரமான மகிழ்ச்சி அந்த எண்ணத்தை அடித்துவிடும்.

"நாக்கு நீளம் சாப்பாட்டு விஷயத்தில்" என்று அம்மாவிடம் குட்டுப்பட்டவள்தான்.

கல்யாணமான புதிதில் சேலத்துக்கு வேலை விஷயமாகப் போனான் பாஸ்கரன். அப்போது மாம்பழக்காலம். மாம்பழத்தை நறுக்காமல், கையில் அதன் ரஸம் ஒழுக, சதைப்பகுதியில் பற்கள் அழுத்திப் பதித்து வெண்ணெய்க் கட்டியாய் மாம்பழம் வாயில் போகும்படி சாப்பிடுவதில் அவளுக்கு அலாதிப் பிரியம்.

"வரும்போது கட்டாயம் மாம்பழம். ம்?"

அவன் திரும்பி வரும்போது முகமெல்லாம் ஆர்வம் கொப்பளிக்க, "எங்கே நான் கேட்டது?" என்றாள்.

"ரொம்ப விலை ஜாஸ்தி. வாங்கலை."

அன்றைக்குத் தன் நாக்கை அவள் அறுத்து எறிந்துவிட்டாள்.

சரோஜாவே அவளிடம் கேட்டதுண்டு.

"ஒண்ணுலேயும் ஆர்வமே இல்லாம இருக்கியே மன்னி. எதுக்காகத் தான் நீ இருக்காய்?"

"இருக்கணுமே அதுக்காக. இதைவிட வேற காரணம் என்னடி இருக்கு?"

எல்லாவற்றையும் தைத்து முடிக்கும்போது மணி நாலாகிவிட்டது. சேகர் பள்ளியிலிருந்து வரும் நேரம்.

எல்லாவற்றையும் எடுத்து வைக்கும்போது சேகர் வந்தான்.

வழக்கம்போல் ஆயிரம் செய்திகள்.

"மோகன் தமிழ்லே பஃஸ்டு வந்தானோ இல்லையோ, அவனுக்கு மூணு சக்கர சைக்கிளாம்மா."

"உனக்கும் வேணுமாடா?"

"சீ, சீ."

“என்னாடா சீ, சீ?”

“போம்மா. நான் பெரிய பையன். எனக்கு ரெண்டு சக்கர சைக்கிள்தான்.”

“வேணுமா?”

பாக்கெட்டில் கைவிட்டு இரண்டு பத்து பைசாக்களை எடுத்தான்.

“பாரு நான் காசு சேர்த்திருக்கேன். எல்லாம் என் காசு.”

பாவி! அப்பா மாதிரியே பேசுகிறான்!

“நிஜமா சைக்கிள் வேணுமாடா? வாங்கித்தரலாமா?”

“அதெல்லாம் ஜாஸ்தி வெலை. இல்லம்மா?”

அவள் மனம் ஓலமிட்டது. சைக்கிள் வேண்டுமென்று கீழே விழுந்து புரண்டு அவன் அழுதிருந்தால் அவள் மனம் சாந்தி அடைந்திருக்கும். உதட்டைச் சிறுக மூடிக்கொண்டு பதில் பெரிய மனுஷத்தனமாகச் சொல்வது அவளை வாட்டியது. தனக்குக் கிடைக்காது என்பதை இவ்வளவு ஆர்ப்பாட்டம் இல்லாமல் அவன் ஏற்றுக் கொண்டதை அவள் மனத்தால் தாங்க முடியவில்லை.

குழந்தைத்தனம் என்பது இப்போதெல்லாம் இல்லையா?

ஏன் எல்லாருமே பெரியவர்கள் மாதிரி நடந்துகொள்கிறார்கள்? சனியன், ஒரு குரல் அழக்கூடாதா? அவன் ஒருவன்தான் அந்த வீட்டில் இயற்கையாக நடந்து கொள்கிறான் என்று சமாதானப் படலாமே.

“போடா, வெளையாடப் போ. மண்ணுலே விளையாடாதே.”

சிறிது நேரத்திற்குப் பிறகு பாஸ்கரன் வந்தான்.

“சாயா, அந்த கோபாலன் பையனுக்குப் பூணூலாம். நீ போயிட்டு வந்துடு. நான் பகல்லேயே போயிடுவேன்.”

“சரி.”

“நாளைக்குச் சமைக்க வேண்டாம். அங்கேயேதான் சாப்பாடு.”

“என்ன ப்ரஸண்ட் தரப் போறேள்?”

“பூணூலுக்கெல்லாம் ஒண்ணும் தரவேண்டாம்.”

“சாப்பிட மட்டும் போலாமாக்கும்?”

“என் சிநேகிதன் பிள்ளை பூணூலுக்குச் சாப்பிடாம வேற எங்கே சாப்பிடறது?”

“நீங்க போங்கோ. நான் வரலை.”

"சரி. வரல்லைன்னா வேண்டாம்."

அவ்வளவுதான். பஸ் காசாவது மிச்சம். அவன் இன்னொரு முறை கூப்பிட மாட்டான்.

அவளே மீண்டும் கேட்டாள்.

"அப்படின்னா நீங்க மாத்திரம் போறேளா?"

"நீதான் வரமாட்டேன்கிறாயே?"

"ப்ரஸன்ட் இல்லாம எப்படிப் போறது?"

"குடேன், நீயும்தான் தைச்சு சம்பாதிக்கிறாயே, அது மட்டும் பணம் இல்லையா?"

கேள்வியைக் கேட்டு அவள் அதிர்ந்துவிட்டாள். சரியான கேள்வி தான். அதை உபயோகிக்கலாம் என்று அவளுக்கு ஏன் ஒருநாளும் தோன்றவில்லை? இப்போது கூட அதிலிருந்து எடுக்க மனமில்லை. அவள் உடல் வெடவெடவென்று நடுங்கியது. அவள் மனதார வெறுக் கும் குணம் அவளிடம், அவளையும் மீறித் தொற்றிக் கொண்டுவிட் டதா என்ன? சேகர் சைக்கிள் கேட்டபோதுகூட அவள் அதைப் பற்றி எண்ணவே இல்லையே? சில்லிட்டுப் போன கைகளால் பக்கத் தில் இருந்த நாற்காலியை அவள் பற்றிக்கொண்டாள்.

"என்ன சத்தத்தையே காணோம்?"

"ஒண்ணுமில்லை."

ரவிக்கைக்கு நல்ல மாதிரி தேட ஒரு டிசைன் புத்தகத்தை வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

செய்தித்தாளைப் புரட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த அவனிடம் திடீரென்று "சேகருக்கு சைக்கிள் வேணுமாம்" என்றாள். "அவன் ஆயிரம் சாமான் வேணும்பான். எல்லாமே வாங்க முடியுமா? ரெண்டு வருஷம் போனால் வீணாப் போயிடும்." புத்தகத்தை மடியில் பிரித்துப் போட்டுக்கொண்டு ஒரு பக்கத்தைக் கையால் தடவியவாறே அவள் மெதுவாகக் கேட்டாள்.

"எதுதான் இப்போ அவசியம்?"

பாஸ்கரன் அவளை ஆச்சரியத்துடன் பார்த்தவாறே "என்ன வந்துடுத்து உனக்கு இன்னிக்கு?" என்றான்.

"ஒண்ணும் இல்லை. எனக்கு ரொம்ப அவசியமா ஒண்ணு தேவை. அதை உங்களாலே தர முடியாது."

"என்னது?"

"மனசிலே நிம்மதி" என்று விட்டுப் புத்தகத்தைப் 'பட்' டென்று மூடினாள்.

"சைக்கிள் வாங்கித் தராட்டா மனசுலே நிம்மதி போயிடுமா? யாராவது கேட்டால் சிரிப்பா."

"நீங்களே சிரிக்கிறபோது, மற்றவா ஏன் சிரிக்கமாட்டா?"

"அவ்வளவு தூரம் ஆசையா இருந்தா, நீ வாங்கித்தரதுதானே?"

"வாங்கித் தரத்தான் போறேன்." அடித்துச் சொன்னாள் அவள். தான் கருமி இல்லை என்பதை அவளுக்கே அவள் நிரூபித்துக்கொள்ளவா அப்படி ஒரு அழுத்தம் சொற்களில்? மஞ்சள் காமாலை வந்தவன் தன் பார்வையில் ஏற்பட்ட நிறக் குழப்பத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல், "எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. மஞ்சள் மாதிரி தெரிகிறது. அவ்வளவுதான்" என்று தனக்குத் தானே செய்து கொள்ளும் சமாதானமாய், அடிபட்டுக்கொண்ட சிறுவன் நொண்டிக் கொண்டே, "அடி பலமில்லை. நன்றாக ஓடி விளையாடலாம்" என்று தன்னையே ஆசுவாசப் படுத்திக்கொள்ளும் முயற்சியாய் அவள் திரும்பச் சொன்னாள்.

"கட்டாயமா வாங்கித் தருவேன்."

"அதற்கு என்னைக் கேட்பானேன்?"

"உங்களிடம் கேட்டுப் பார்த்து நீங்க இல்லைன்னா நான் வாங்கித் தரதா இருந்தேன்."

"பேஷ்! அப்படியாவது என்னிடமிருந்து கறந்துடலாம்னு பார்த்தாய்."

"கறக்கறதுக்கு நான் என்ன பால் வியாபாரமா செய்யறேன்."

"பால் வியாபாரமோ, பாக்கு வியாபாரமோ! உன் பணத்தைப் பத்தி நினைச்சுப் பார்த்தியா?"

"உன் பணம் என் பணம்னு என்ன வித்தியாஸம்? குழந்தை நம்பளோடுதானே? இல்லை, அதுவும் சந்தேகமோ?"

"சீ, வாயை மூடு."

அவள் பேசவில்லை.

இரவுச் சாப்பாடு மௌனமாக நடந்தது. அவள் சமையலறையைச் சுத்தம் செய்துவிட்டு வருவதற்குள் சேகர் கதவோரமாய்த் தூங்கி வழிந்துகொண்டிருந்தான். அவனைத் தூக்கிக் கட்டிலில் போட்டாள். விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கையில் சாயும்போது, கதவோரமாகத் திரும்பிப் படுத்துக்கொண்டு நிச்சிந்தையாகத் தூங்கும் அவன் மேல் அவளுக்குக் கோபம் வந்தது. கத்தியால் கீறிய ரத்தக் கட்டிகளாய்க் கேள்விகளை வீசிவிட்டு என்ன தூக்கம்! அவன் ஏன் தூங்கமாட்டான்? அதற்கு விலை இல்லையே? தூங்கிவிட்டு விழித்தால் யாரும் 'பில்' லை நீட்டப்போவதில்லையே?

“என்னை எவ்வளவு ஈனமாக எண்ணிவிட்டார் இவர்! எனக்கா செலவழிக்க மனமில்லை?” என்று மனம் பொருமியது.

அவள் கல்யாணம் நிச்சயமானதும் எத்தனை தோழிகளுக்குக் கடற்கரை சினிமா என்று அவள் செலவழித்தாள்?

அவள் மனத்தில் கம்பளிப் பூச்சிபோல் ஒன்று நெளிந்து அரித்தது. பின்பு அவள் ஏன் சேர்த்துவைத்த பணத்திலிருந்து வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று நினைக்க வில்லை? யாருக்காக அதை அவள் சேர்த்தாள்?

ஒரு அவசரத் தேவைக்கு...

எது அவசரம்? எது தேவை? யாருடைய தேவைக்கு? எப்படிப் பட்ட தேவைக்கு?

மின்னல் வெளிச்சத்தில் உயிர் பெற்றுச் சில நிமிஷங்கள் ஒளிரும் இரவின் தோற்றங்களாய் மன இருட்டிலிருந்து சில உணர்வுகள் உதறிக் கொண்டு வெளி வந்தன.

பாங்க் பாஸ் புத்தகத்தைப் பிரித்து அதிலிருக்கும் தொகையைப் பார்ப்பதில் அவளுக்கு ஏன் இந்தத் திருப்தி? உணர்வுகளே கரும் பூதங்களாய் ஆள்காட்டி விரலை அவளை நோக்கிச் சுட்டிக்காட்டி “நீயும்தான் அப்படி” என்று கொக்கரித்தன. அவள் விலக்கித்தள்ளி னாள். அவை போர்வையாய் மேலே கவிந்துகொண்டன. போர்வை அவளை இறுக்கியது. தொண்டைக்கு அடியே நெஞ்சம் வறண்டது. எச்சில் விழுங்கினால் புண்மீது மருந்து தடவியதுபோல் எரிந்தது. கண்கள் கசிந்தன.

“அழறயா என்ன?”

அவளுக்குத் தூக்கிப்போட்டது. அவள் அழுதிருக்கிறாள்.

“எதுக்கு இப்போ ராத்திரி அழுகை?”

அது ஒன்றில்தானே தாராளமாக இருக்க முடியும்...

அவனுடைய கரங்கள் அவளை அணைத்தன.

சட்டம்: வேண்டாத வேளையில் நெருங்கும் கணவன்...

அவன் கரங்களில் அவள் துவண்டாள். அந்த நெகிழ்ச்சிக்கு முர ணாக ஒரு எண்ணம் நெஞ்சில் விவஸ்தை இல்லாமல் ஓடியது – பணம் கொடுக்காமல் அடைய முடியும் என்பதாலேயே இவர் என்னை நாடுகிறாரோ?

எண்ணத்தின் முரண்பாடே நெஞ்சத்தில் நெருப்புக் கங்குகளை உருட்டியது. அவளைத் தகித்த நெருப்பின் ஜ்வாலையில் அவள் வதங்கி வாடினாள்.

அவன் கரங்கள் அவளை இறுகத் தழுவின. சூடான காப்பியைக் குடிக்க ஆத்திரப்படும் ஒருவனின் அவசரத்தோடு அவன் முகம் அவளை நோக்கி நெருங்கியது.

சட்டம், சட்டம், சட்டம்! இப்படி நிர்ப்பந்திக்கும் கணவன்மார் களுக்கு ரெட் லைட் ஏரியாவில் நிரந்தரமாக வீடு தர வேண்டும்...

அவள் அழுகை நெஞ்சக் கதவுகளில் மௌனமாக மோதிக் கொண்டது.

○

"ஸார், போஸ்ட்."

"சாயா, உனக்கு லெட்டர் வந்திருக்கு பார்."

இடுப்பில் செருகியிருந்த துண்டில் கையைத் துடைத்துவிட்டுக் கையை நீட்டினாள் சாயா.

கடிதம் உடனே கிடைக்கவில்லை.

வாய்விட்டு அதை முணுமுணுப்பாய்ப் படித்துக்கொண்டிருந்தான் பாஸ்கரன்.

நீண்ட கையை மடக்கி, கோபத்தில் கடிதத்தைப் பிடுங்கத் துடிக்கும் விரல்களை முஷ்டியாய்க் குறுக்கிக்கொண்டாள்.

எப்போழுதோ யாரோ தோழி இருபது ரூபாய் கடன் கேட்டு எழுத இவள் அனுப்பி விட்டாள். கல்யாணமான ஆரம்பம். இப்போது நினைத்தால் அவளுக்கு வியப்பாக இருக்கிறது. பட்டினி கிடப்பவன் சோற்றைக் கண்டால் நாக்கைச் சப்புக்கொட்டிக்கொள்வதைப்போல் பத்து ரூபாய் நோட்டைக் கண்டால் உள்ளம் விரியும் அவள் எப்படி இருபது ரூபாய் அனுப்பினாள் என்று. அதிலிருந்து அவள் கடிதங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அவளை அடைந்தன.

"உன் அம்மா எழுதியிருக்கா."

"நீங்கதான் படிச்சாச்சே? விஷயத்தைச் சொல்லுங்கோ."

சின்ன வயதில் எல்லாம் என் பாவாடை, என் பலப்பம், என் புஸ்தகம். என் ரிப்பன் என்று தன்னுடையதையெல்லாம் அவள் பகிர்ந்துகொள்ள முடியாத சுயநலத்தோடு பாதுகாப்பாள். ஏன், அவள் தட்டில் யாராவது சாப்பிட்டாலே பேயாட்டம் ஆடுவாள்.

புளியங்கொட்டையைக்கூடச் சேர்த்து வைக்கும் அவளைப் பார்த்து ஓவென்று கோணாமாண பற்கள் தெரியச் சிரிப்பாள் சித்தி.

"நீ கெட்டிக்காரிடீ."

தன் புளியங்கொட்டைக்குச் சண்டை பிடித்த சாயா தன் கடிதத்தை – வரிக்கு வரி பாசம் சொட்ட அம்மா எழுதிய கடிதத்தை – பாலைவனச்

சுடு மணலில் பாலை ஊற்றினாற்போல் அவன் மனத்தில் பொசுங்கிப்போகவிடுகிறாள். தன் கடிதத்தை அவன் படித்த பிறகு அவள் படிக்க விரும்புவதில்லை. அதில் உள்ள சுவையையே அவன் ஈரமற்ற கண்கள் வறள வைத்தாற் போல் அவளுக்குத் தோன்றும்.

"விஷயம் என்ன ? நீயே படியேன். உன் தங்கையைப் பெண் பார்க்க வராளாம். உன்னை வரச்சொல்லி இருக்கா. நேரிலே வந்து சொன்னா என்ன ? வேப்பேரியிலேந்து தில்லக்கேணிக்குக் கடிதம் என்ன ?"

"நிஜமாவா ? தாங்கோ லெட்டரை."

பூனைக்குட்டியைத் தடவுவது போல் மெதுவாய்க் கடிதத்தை வாங்கினாள்.

அது அம்மாவின் கடிதம்.

"அன்புள்ள என் கண்மணி சாயாவுக்கு..."

கடிதத்தைப் படித்து முடிந்ததும் "என்ன ?" என்றாள் பாஸ்கரனிடம். எனக்கென்ன தெரியும்? ஆயிரம் பேர் பெண் பார்க்க வருவா. ஒவ்வொரு தடவையும் நீ போக முடியுமா ?

அந்த நாக்கு !

"ஏதோ எழுதியிருக்காளே அம்மா..." என்றாள்.

அவன் தீர்மானமாய் ஒன்றும் சொல்லாமல் போய்விட்டான். அந்தக் கணம் ஒரு ஹிந்துப் பெண்ணுக்குத் தோன்றக்கூடாது என்று காலம்காலமாய் எல்லோரும் சொல்லும் ஓர் எண்ணம் அவளுக்குத் தோன்றியது. அவனை விட்டுப் போய்விட வேண்டும் என்று அவள் நினைத்தாள். பத்து வருஷங்களாய் இழுக்க இழுக்க நீளும் ரப்பர் துண்டாய் வளைந்து கொடுத்த மனம் அன்று 'கல்' லென்று உடைந்தது. மனம் நினைத்த மறுவினாடியே, எதிர்காலத்திட்டங்கள் நீண்டு அவள் தீர்மானமே செய்துவிட்டாள்.

உடம்பிலிருந்து ஏதோ கழன்று விழுந்து லேசாகிவிட்டதைப் போல் அவள் உணர்ந்தாள். அவள் படித்தவள், (ஹா, எத்தனை நாட் கள் கழித்து இந்த விவரம் நினைவுக்கு வருகிறது !) அவளுக்குச் சம்பாதிக்கத் தெரியும். பின்பு ஏன் இந்தச் சிறை? கல்லானாலும் கணவனைக் கட்டிக்கொண்டு அழுபவர்கள் அழட்டும். அவள் சிந்திக்கத் தெரிந்தவள்.

நல்லது என்பதும் கெட்டது என்பதும் இதுதான், அதுதான் என்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவை அல்ல. தன் மனத்துக்கு, தன் சிந்தனைகளுக்கு எது இதம் அளிக்கிறதோ அதுதான் நல்லது. இரவு உடம்பை நன்றாக நீட்டி மின்சாரத்துக்குப் பணம் கட்டவேண்டும் என்ற மனக்குத்தல் இல்லாமல் விசிறியைப் போட்டுக் கொண்டு விச்ராந்தியாய்த் தூங்கும் நிலைமையை எது தருகிறதோ அதுதான் நல்லது.

அவள் சிறகுகளை விரித்து அவள் பறக்க வேண்டும். விசும்பின் நிச்சலனமான அமைதியில் அவள் சிறகுகள் அசைய வேண்டும். அதுதான் வாழ்க்கை.

அவள் ஏதாவது வேலை தேடிக் கொள்வாள். அன்று ஒருநாள்கூட பக்கத்து ஸ்கூல் தலைமையாசிரியை "எங்க ஸ்கூல்லே தையல் டீச்சர் இல்லை. தற்காலிகமாய் நீங்க வந்துவிடுங்களேன்" என்று கூப்பிட வில்லையா? அதைப் போய் விசாரித்தால் தெரிந்துவிடுகிறது. அது இல்லை என்றாலும் கவலை இல்லை. தையல் மிஷின் அம்மா வாங்கித் தந்ததுதான். அதை வைத்தே பிழைத்துவிடலாம். ஒரு ரவிக்கைக்கு இரண்டு ரூபாய். ஆ, அந்த வாழ்க்கை எப்படி இருக்கும்? அவளும், சேகரும் மட்டுமே. சின்ன வீடு ஒன்று, இரண்டு அறைகள் போதும். முதல் அறையில் மடக்கு நாற்காலிகள் இரண்டு; மூலையில் தையல் மிஷின்; இன்னொரு மூலையில் சின்ன மேஜை, நாற்காலி சேகர் படிக்க. அவள் தினம் தைப்பாள். சேகர் ஸ்கூலுக்குப் போவான். மாலையில் இருவருமாய் மயிலாப்பூருக்குக் காய்கறி வாங்கப் போகலாம்.

சேகர் பிறந்தநாள் வரும். அவன் தோழர்களை எல்லாம் அவள் சாப்பிடக் கூப்பிடுவாள். தித்திப்புப் பண்டம் செய்வாள் – சர்க்கரை என்ன விலை விற்றாலும்.

இரவு அவள் உடம்பை நன்றாக நீட்டிப் படுக்கையில் புரளலாம். ரோமமில்லாத மார்பில் சாய வேண்டாம். மென்மையற்ற கைகளால் அணைக்கப்பட வேண்டாம். படுக்கை முழுவதும் அவள் மட்டுமே.

புகை மண்டலங்களாய் அவளுடைய நினைவுகள் – கனவுகள் – மேலெழுந்தன.

"அம்மா..." சேகரின் அழைப்பு காதில் விழுந்தது.

மலையிலிருந்து கீழே குதித்துவிட்ட அதிர்ச்சியுடன் உடலைச் சிலிர்த்துக் கொண்டு, "என்னடா?" என்றாள்.

அந்தக் குரல் நாளங்களின் அசைவே பெருங்காற்றாய்ப் புகை மண்டலங்களை ஊதித் தள்ளியது. அகன்ற கைகளாய் நீண்டு, விரித்த சிறகுகளை ஒடுக்கியது. தான் அப்படி நினைத்தோமா என்ற ஐயமே அவளுக்கு ஏற்பட்டது. அதீத வெறியில் கொலை செய்து விட்டுக் கத்தியும், கையுமாய்த் தான் செய்துவிட்ட செயலை நம்ப முடியாமல் நிற்கும் கொலைகாரன் நிலைமையில் அவள் இருந்தாள்.

தான் நினைத்தது சரியா தவறா என்ற சிந்தனை அவளுக்கு ஏற்பட வில்லை. சரி, தவறு என்பதெல்லாம் ஒரு குறிப்பிட்ட சட்டதிட்டங் களுக்கு அடங்கியவை அல்ல.

அவள் அப்போது நினைத்து ஆச்சரியப்பட்டது எல்லாம் தனக்கா அப்படி ஒரு சுதந்திர உணர்ச்சி தோன்றியது என்றுதான். மூன்றாம்

மனுஷி ஒருத்தியைப் பார்ப்பது போல் தன்னையே பார்த்துக் கொண்டபோது இப்படி ஓர் எண்ணம் அவள் மனத்தில் இவ்வளவு நாள் இருந்தது அவளுக்கே எப்படித் தெரியாமல் போய் விட்டது என்று அவள் வியப்புற்றாள். தேங்காயை உடைத்தால் சளசளவென்று கொட்டும் இளநீரைப் போல் அல்லவா அவள் எண்ணங்கள் வெளிப் பட்டு விட்டன!

பண்ணக்கூடாதது என்று அவள் நினைக்காவிட்டாலும், பண்ணிப் பயனில்லை என்ற முடிவுக்கு அவள் வந்துவிட்ட பிறகும்கூட அந்த எண்ணங்கள் வெளிப்பட்ட வேகம் அவளைத் தடுமாற வைத்தது. தளைகளை அறுத்துக்கொண்டு ஓட வேண்டுமென்ற உந்துதல் தனக்குக்கூட – பத்து வருடங்களில் கொஞ்சம் கொஞ்சமாய் மனம் வெறுத்து, எதையுமே நிலையற்றது என்று கருதும் மனநிலைக்கு வந்துவிட்ட அவளுக்குக்கூட – ஏற்பட்டதுதான் வேடிக்கையாக இருந்தது.

சேகரிடம் போனாள்.

"என்னடா கூப்பிட்டே?"

"பந்து விளையாடறச்சே இது விழுந்துடுத்தும்மா!"

கண்ணாடி உடைந்த புகைப்படம்.

அது, அவள், பாஸ்கரன், சேகர் மூவருமாய் எடுத்துக்கொண்டது. சேகர் பிடிவாதம் பிடித்ததால் எடுத்துக் கொண்டது.

அவள் – ஊதாவில் ரோஜாநிறக் கரைபோட்ட புடவை.

சேகர் – கட்டம் போட்ட சட்டையும், பான்ட்டும்.

பாஸ்கரன் – சாபமிடப்பட்ட நளன்...?

மீண்டும் இப்போது அதைப் பார்த்தபோது அவளுக்குப் பரிதாப மாய் இருந்தது, "ட்ரெஸ்ஸிலே ஒண்ணுமில்லே, மனசுதான் பெரிசு" என்று அவள் பிறந்த வீட்டில் பாஸ்கரனின் அலங்கோலத்துக்குக் காரணம் கற்பித்திருந்தாள். ஆனால் உண்மையில் அதன் அர்த்தம் கூட அவனுக்குப் புரியாது என்பது அவளுக்குத்தான் தெரியும். நன்றாக உடை உடுப்பதின் அவசியத்தை உணராதது மட்டுமல்ல, அதற்காகச் செலவிடும் பணத்தின் ஆசையை உணர்ந்ததும்தான் இதற்குக் காரணம் என்பதை அவள் அறிவாள்.

ஆரம்பத்தில் அண்ணாகூட, "உனக்கு உன் கணவனைப் பேசி மாத்தத் தெரியலைன்னா அது உன் தோல்விதான்" என்றபோது அவள் இடிந்து போய்விட்டாள். இரு நபர்கள் எவ்வளவுதான் இணைந்தாலும் தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் உண்டு; அந்தச் சுதந்திரத்தை இருவருமே பழிக்கலாகாது என்பது அவள் கொள்கை. அவனை அவள் ஏன் மாற்ற முயல வேண்டும்?

அவன் குணத்தின் கோணலை அவன் உணராதபோது – ஏன் அந்தக் குணம்தான் சிறந்தது என்று அவன் கருதும்போது – மாற்ற முயற்சி செய்வது மடமை என்று அவள் எண்ணினாள். அப்படி இருக்க அவனுக்குச் சுதந்திரம் உண்டு – இப்படித்தான் வாழ்க்கை அமைய வேண்டும் என்று இருக்கும்போது, வீணாக எதிர்த்துப் போராடுவதில் அர்த்தம் இருப்பதாக அவளுக்குப் படவில்லை. இருந்தும் அண்ணா தோல்வி என்று குறிப்பிட்டதும் முயற்சி செய்யாதது தவறோ என்று அவள் எண்ணத் தொடங்கினாள்.

கணவனை மாற்றிவிடும் ஆரம்ப உற்சாகத்துடன் அவள் செல வழிக்கத் தொடங்கினாள். அடிக்கடி அவன் காதுபட, "பணம் இன்னிக்கு வரும் நாளைக்குப் போகும். சந்தோஷம் அப்படி இல்லையே?" என்று சொல்லிக்கொண்டேயிருந்தாள். அவனுக்கு அது புரியவும் இல்லை. அவள் செலவழிப்பதன் நோக்கத்தை அவன் புரிந்துகொள்ளவும் முயற்சி செய்யவில்லை. இந்தக் கல்யாண வாழ்க் கைக்கான செலவுத் திட்டங்களைக் கூட முன்பே குறித்து வைத்துவிட் டதைப் போல் அவன் திட்டமாய்ச் செலவு செய்தான்.

சில நாட்கள் அவள் பேசாமல்கூட இருந்தாள். பிறகு அவன் அந்த மௌனத்தைக் கவனிக்காமலேயே இருந்துவிட்டதால் அவள் கைவிட்டாள்.

"அஞ்சு நாளா ஏன் பேசலை தெரியுமோ?" என்றாள் இரவில்.

"பேசலையா என்ன?" என்றான் அவன்.

பிறகு சிக்கனமாய் இருக்க வேண்டியதன் அவசியத்தை விளக்கி னான். அப்போது அவனை அவள் வெறுக்கவில்லை. மெதுவாகச் சொன்னாள்: "நீங்கள் சின்ன வயசிலே ரொம்பக் கஷ்டப்பட்டேள். ஒவ்வொருத்தர் வீட்டுலே சாப்பிட்டுண்டு படிச்சிருக்கேள். கிணற் றிலே ஜலம் எடுத்து வீடு வீடா ஊற்றியிருக்கேள். பணம் இல்லாம கஷ்டப்பட்டதால் பணமே பிரதானம்னு நினைக்கறேள். இப்போ அப்படி இல்லையே? என்னைவிடப் பெரிசா பணம்?"

கணவனை அனலைஸ் செய்வதுபோல் ஒரு முட்டாள்தனம் வேறு கிடையாது என்று இப்போது தோன்றியது. அவள் அவனுக்குத் தானம் செய்யப்பட்டவள். அவன் வயதில் பெரியவன். சரீரத்தில் பலம் வாய்ந்தவன். ஸோபா ஸெட் போல் அவள் அவன் சொத்து. அவன் இறந்து போனால் இவள் மேல் திரையை மூடி "த எண்ட்" என்று எழுதிவிடுவார்கள். இதில் இவள் ஃப்ராய்டு எல்லாம் படித்து மனதைக் குழப்பிக்கொண்டு, அவன் நடத்தைக்குக் காரணம் கற்பித்து என்ன பயன்? தான் ஆளப்பிறந்தவன் என்ற உரிமையைவிட வேறு எந்த உணர்வு அவனை இப்படி பலசாலியாக்க முடியும்?

சாயா பாஸ்கரனை வெகு அழகாக அனலைஸ் செய்தாள்.

“என்ன பேசறே நீ?” என்று கடகடவென்று சிரித்தான் அவன். அவன் சிறு வயதில் குடம்குடமாய் கிணற்றிலிருந்து தண்ணீரை மட்டும் இறைக்கவில்லை. தன் நெஞ்சிலிருந்து மென்மை உணர்வு களையும் எடுத்து ஊற்றிவிட்டான் என்று அவள் தெரிந்துகொண் டாள் அன்று.

புகைப்படத்தில் ஒழுங்கில்லா ஆடையுடன் காட்சியளித்தான் அவன். அந்தப் படத்தில் தான் நன்றாக வந்திருப்பதாக அவன் அடிக்கடி கூறிக்கொள்வான். மற்றவர்கள் ஏளனமாய்ச் சிரிப்பதைப் பொருட்படுத்தாமலோ, புரிந்து கொள்ளாமலோ “ஜோரா இல்லை?” என்ற கேட்டுப் பெருமைப்படும் அவனைப் பார்த்து அவள் பரிதா பப்படுவாள். அப்போது கேலிக்குரிய பொருளான அவனை ஆதரிக்க வேண்டும்; விட்டுக்கொடுத்துவிடக் கூடாது என்ற மனிதனுக்கு மனிதன் தோன்றும் இரக்க உணர்வே அவளை அவனிடம் நெருங்க வைத்தது.

கணவன்-மனைவி உறவின் ரஸவாதங்களே அற்றுப் போய், மூன்றாம் மனிதனுக்குக் காண்பிக்கும் மரியாதைகளும் உபசாரங் களுமே எஞ்சினபோல் அவளுக்குத் தோன்றியது. தன் கணவன் என்பதால் அவள் அவனுக்குப் பரிவுடன் உணவு படைக்கவில்லை; மழையில் நனைந்து வந்தால் பதட்டப்படவில்லை; உடம்பு சரியில்லா மல் போனால் சிசுருஷை செய்யவில்லை; அவன் ஒரு மனிதன் – எந்த மனிதனுக்கும் அவள் அதைச் செய்வாள் ஒரு பண்பட்ட முழுமை அடைந்த மனத்தை உடையவள் என்ற முறையில்.

சில சமயம், பக்கத்து வீட்டு நாய் லக்கி மழையில் நனைந்து நடுங்கியபோது, அவள் மனம் கனிந்து, அதைத் துடைத்து, கனத்த சாக்கைப் போட்டுப் படுக்க வைத்தபோது ஏற்பட்ட இரக்க உணர்வுக்கும், தன் கணவனிடம் தனக்கு ஏற்படும் இரக்க உணர்வுக்கும் என்ன வித்தியாசம் என்று அவள் எண்ணுவதுண்டு.

“அம்மா, அப்பா திட்டுவாரம்மா?”

“மாட்டார்டா கண்ணா, இனிமே உள்ளே பந்தாடாதே,”

“சீக்கிரம் கண்ணாடி போட்டுடலாம்மா. இதிலே நீ அழ. . .கா இருக்கேம்மா.”

அவளுக்கு அந்த நிமிடம் ஏற்பட்ட சந்தோஷத்தை எண்ணி அவளே வெட்கப்பட்டாள். என்ன மனம் இது, பாழும் மனம்! எதற்குத்தான் சந்தோஷப்படுவது என்று நியதி கிடையாதா? இத்தனை சின்ன வாண்டுப் பயல் அவளை அழகு என்று விட்டால் இப்படியா மனம் துள்ளுவது?

மகிழ்ச்சிக்கிடையே நெஞ்சம் வலித்தது. இந்த ஒரு வாக்கியம் எப்படி உள்ளத்தைக் குளிர்விக்கிறது? இதை அவள் ஓர் ஆணின் வாயால் கேட்டதில்லை என்பதாலோ என்னவோ அவள் மகனே சொன்னபோது அவளுக்கு அது இனித்தது.

“அம்மா, நீ அழகா இருக்கேம்மா. . .”

சேகர் அவன் மனைவியிடம் "நீ அழகா இருக்காய்" என்பான் ஒரு நாள்.

இந்த எண்ணம் வந்தபோதுதான் தன் கணவன் தன்னிடம் ஒரு முறைகூட அப்படிச் சொல்லாதது தனக்கு எவ்வளவு குறையாக இருந்திருக்கிறது என்பதை அவள் உணர்ந்தாள். வாழ்க்கையின் அவசியமான உணர்வுகளைத் தணித்துக் கொள்ளவும், தனக்கு மற்ற உதவிகளைச் செய்யவும் மட்டுமே அவன் அவளை வைத்துக் கொண்டிருந்தான். இரு வேறு உடலங்கள் ஒருமித்து, இணைவதற்கு இனி இதைவிட அதிகமாக ஒன்றுமில்லை என்பதுபோல், அன்பின் சங்கமத்தில் வந்து நின்றபோதுகூட அவன் அதைச் சொன்னதில்லை. இயந்திரகதியில் ஏற்பட்ட அந்த நெருக்கம் சில சமயம் அவளை அந்த நெருக்கத்தை வெறுக்க வைத்திருக்கிறது. வாய்விட்டுச் சொன்னால் மற்றவர்கள் பாபம் என்று எண்ணும் (அம்மாவிடம் சொன்னால் செம்மண் தேய்த்துக் குளிக்கச் சொல்லுவாள்!) ஒரு நினைப்புகூட அவளுக்கு அடிக்கடி தோன்றும். காசு வாங்கிக்கொண்டு உடலைத் தரும் பெண்ணைவிடத் தான் மோசம் என்று. அவளாவது பணத்துக்காகச் செய்கிறாள். தன்னுடைய இந்த நெருக்கம் எதற்காக? கடமையைச் செய்யும் பதிவிரதையா அவள்? அப்படித்தான் சொல்லும் உலகம், அவள் நிலையை உணர்ந்தால். தன்னை அவள் பரிபூர்ணச் சுத்தமாய் வைத்துக்கொண்டு, அன்பில்லாக் கணவனுக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுவிட்டதாகச் சொல்லும்.

வேஷதாரிகள் எல்லாம் பதிவிரதைகள் என்றால் நானும் அப்படித் தான் என்று அவள் அலுத்துக்கொள்வாள். தன் மகிழ்ச்சியை அடையப் பொங்கி எழாமல். தன்னையே பொசுக்கிக்கொள்ளும், தன்னைப் பெரிய தியாகியாக பாவித்துக் கொண்டு (சட்டம் : பெண்ணைத் தியாகம் செய்ய வைத்துத் தமிழ்ப்படம் எடுப்பவர்கள் மேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்) தன்னையே ஏய்த்துக் கொள்ளும் ஆத்ம துரோகம்தான் எல்லோர் கண்களுக்கும் பெண்மையின் பெருமையாகப் படுகிறது.

இல்லாத தெய்வீகப் பெருமைகளுக்காக வாழ வேண்டுமாம்! "எனக்கு இப்போது என் உடம்பை ஓர் ஓவியத்தை ரஸிப்பது போல் ரஸித்து உடன் படுப்பதே ஓர் அமைதியான அழகு என்ற உணர்வைத் தோன்றவைக்கும் ஓர் ஆணின் துணை தேவை. ஆ! நினைத்து விட்டேன்! என்ன ஆகிவிடும்? எரிந்துவிடுமோ பாரதநாடு?" என்று சிலிர்த்துக்கொள்வாள் சில சமயம். உண்மை என்பதே தற்கொலை செய்து கொண்ட பிறகு, பழம் பெருமை என்ன, பாரதம் என்ன வேண்டியிருக்கிறது?

"நான் போறேம்மா" என்று போய்விட்டான் சேகர். எண்ண ஓட்டத்தில் கையிலிருந்து கீழே நழுவி விழுந்துவிட்ட கடிதத்தைக் குனிந்து எடுத்தாள்.

இந்த ஒரு கடிதம் இவ்வளவு மனக் குமுறலை வெளியே கொண்டு வருமானால், அவள் அம்மா வீட்டுக்குப் போக எவ்வளவு விரும்பி யிருக்க வேண்டும்? அந்த ஆவலை ஏன் அந்த மரக்கட்டையால் புரிந்துகொள்ள முடியவில்லை?

பூமாவுக்கு இன்றைய நாள் எவ்வளவு சுவையானதாக இருக்கும் என்று அவளுக்குத் தெரியும். பூமா அவளுக்குத் தங்கை மட்டுமல்ல. தோழிகூட. அவளிடம் எதையும் மறைத்ததில்லை. தன் மன வேதனை களை மட்டும்தான் அவள் இருதயம் முட்டமுட்ட தாங்கிக்கொண் டாள். மற்ற எல்லா விஷயங்களிலும் பூமாவுக்குப் பங்கு உண்டு.

பூமாவைப் பார்க்க வருபவன் யார், என்ன வேலை, எப்படிப் பட்டவன் என்றெல்லாம் அறிய மனம் துடித்தது. அடிக்கடி பூமா கல்லூரியிலிருந்து வரும்போது ஈஸ்வரன் என்பவனோடு வருவாள். நல்ல பையன். அப்பாவை நைச்சியம் செய்து அவனையே முடித்துக் கொண்டுவிட்டாளோ!

அவள் எண்ணப்போக்கு அவளுக்கே வேடிக்கையாக இருந்தது. தன்னுடையது, பெற்றோர் பார்த்து நிச்சயம் செய்த கல்யாணம் என்பதாலேயே, அவள் மனம் அதை எதிர்த்து, தங்கைக்கு வேறு வகையில் திருமணம் நடத்த வேண்டும் என்று விழைகிறதோ? தலையைக் குலுக்கிக்கொண்டாள்.

இன்று என்னவோ ஆராய்ச்சி அதிகமாகிவிட்டது. தன் சிந்தனை பெரிய புரட்சியை உண்டாக்கிவிடுவதைப் போல்தான் எண்ணம் என்று அலுத்துக் கொண்டாள்.

அன்று வேப்பேரிக்குப் போக வேண்டும் என்று மனத்தில் தோன்றி விட்டது.

பாஸ்கரன் பணம் ஒன்றும் கொடுத்துவிட்டுப் போகவில்லை என்று நினைவு வந்தது. மணி 12.30. பாங்குக்குப் போகக்கூட நேரமில்லை. சமையலறைக்குச் சென்று சில்லறை டப்பாவைக் குடைந்தாள். இரண்டு ரூபாயும் சில்லறையும் கிடைத்தது.

அலமாரியைத் திறந்து, கத்தரிப்பூ நிறத்தில் சரிகைப் பொட்டிட்ட சேலையை பூமாவுக்கு எடுத்துக்கொண்டாள்.

சேகர் உள்ளே வந்தான்.

"அம்மா, பாட்டியாத்துக்காம்மா?"

"ஆமாம். நீயும் வா."

"நீ என்னம்மா கட்டிக்கப் போறே?"

தன் உடையைப் பற்றிக் கவலைப்பட ஒரு ஜீவன் இருந்தது அவளுக்குப் பெருத்த ஆறுதலாய் இருந்தது.

சேகர் சொன்ன புடவையைக் கட்டிக்கொண்டிருந்தபோதே சேகர் ரோஜாப்பூவுடன் உள்ளே வந்தான்.

"ஏதுடா பூ?"

"காசு கொடுத்து வாங்கலேம்மா. எதிராத்து மாமி தந்தா."

முதல் வாக்கியம் சுட்டது.

"காசு கொடுத்து அம்மாவுக்குப் பூ வாங்கமாட்டயாடா சேகர்?"

சேகர் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தான்.

"நிறைய செலவு பண்ணணும்டா மடையா" என்று செல்லமாக அவன் தலையை வருடிவிட்டாள்.

குட்டி பாஸ்கரனாக இருக்கிறானே!

சேகர் சிரித்துக்கொண்டே "ஓ" என்று தலையாட்டினான்.

அவளைப் பார்த்ததும் அம்மாவின் முகம் விகசித்துவிட்டது.

"எனக்குத் தெரியும் நீ வருவேன்னு. நீ இல்லாட்டா பூமாவுக்குக் காலும் ஓடாது. கையும் ஓடாது. வாடா பயலே. சித்திக்குக் கல்யாணம் தெரியுமா?"

"பையன் யாரும்மா? ஒண்ணுமே எழுதாம இருந்துவிட்டாயே? தெரிந்த பையனா?"

" அதெல்லாம் ஒண்ணுமில்லை. ஏதோ காலேஜிலே லெக்சரராம். வருவான். பாரேன். மத்ததை பூமாகிட்டே கேளேன். அவளுக்கும் அவள் அப்பாவுக்கும்தான் எல்லா விவரமும் தலைகீழ் பாடம்."

"உன் பெண் இல்லையோ? உனக்கும் தெரிய வேண்டாமோ?"

"எல்லாம் என் பொண்ணுதான். ஆனால் உன் அப்பா என்னைக் கேட்டா செய்கிறார்?"

அம்மாவுக்கு அது என்றுமே குறைதான். அவளிடம் எதையுமே சொல்லமாட்டார் அப்பா. அவள் அபிப்பிராயத்தையும் கேட்கமாட்டார். பாஸ்கரனைப் பொறுத்தவரை அவளுக்குத் திருப்தியே இருக்கவில்லை.

சாயாவுக்கு மறக்கவில்லை இன்னும்.

கல்யாணப் புகைப்படங்கள் எல்லாம் பெரிய ஆல்பத்தில் ஒட்டி அப்பா எடுத்துக் கொண்டு வந்தார். அம்மா மடியில் வைத்துக் கொண்டு ஒவ்வொன்றாகப் பார்த்தாள். சாயாவும், பூமாவும் இரண்டு பக்கமும் உட்கார்ந்துகொண்டு பார்த்தனர்.

அடிக்கடி அம்மா கண்களைத் துடைத்துக்கொண்டாள். சாயாவுக்கு எல்லாப் புகைப்படங்களுமே பிடித்திருந்தன.

பூமாவும் அவளும் சண்டை போட்டுக்கொண்டு எல்லாவற்றையும் மீண்டும் பார்க்க ஆரம்பிக்கும் முன் அம்மா எழுந்து போய்விட்டாள்.

பார்த்து முடிந்த பிறகு, அம்மாவைத் தேடிக்கொண்டு சாயா சென்றாள்.

"என்னம்மா, ஒண்ணுமே சொல்லாம வந்துட்டே?" என்று கேட்க வாயைத் திறந்தவள் சமையலறை மூலையில் உட்கார்ந்துகொண்டு, விட்டத்தை வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்த அம்மாவைப் பார்த்ததும், "என்னம்மா?" என்றாள்.

"ஒண்ணுமில்லையே. சும்மா தலையைச் சுத்தித்து" என்று உடனே எழுந்து கொண்டாள் அம்மா.

"போம்மா. எல்லாம் எப்படி வந்திருக்குன்னு சொல்லவே இல்லையே?"

"இருக்கிறபடி வந்திருக்கு. மாலையும் கழுத்துமாய் திருஷ்டி படற மாதிரி விழுந்திருக்காய்."

"அவர்...?"

"மாப்பிள்ளையா?" என்று கேட்டுவிட்டு அடுப்பைப் பற்ற வைக்க முனைந்தாள் அம்மா. "மடமடன்னு பாத்திரத்துலே தண்ணி பிடி பார்க்கலாம். காப்பி போட நேரமாச்சு."

"ஏம்மா, கண்ணிலே ஜலம் வரது?"

"புகைடீ. அடுப்புப் புகை. அந்தப் பக்கம் போய் சொன்ன வேலையைக் கவனி" என்றாள்.

அவளுக்கு அன்று இருந்த மகிழ்ச்சியில் அந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவம் அவள் மனத்தில் ஒட்டவில்லை. சில நாட்களுக்குப் பிறகுதான் அம்மா பதில் சொல்லாமல் இருந்துவிட்டதும், புகைமேல் பழிபோட்டதும் நினைவில் உறுத்தியது.

அம்மாவிடம் போய்ச் சண்டை போட்டாள்.

"ஏன் உனக்கு இந்த எண்ணம்? என் மனசுக்குப் பிடிச்சப்பறம் நீ ஏன் அழணும்? உன் பெண் சந்தோஷப்பட்டா உனக்குப் பொறுக்கலை. என்னிக்கும் நீ இப்படித்தான். அவர் காதில் விழுந்தால் எவ்வளவு கஷ்டப்படுவார்?"

"மன்னிச்சுக்கோடீம்மா. தப்புத்தான்" என்று 'நறுக்' கென்று வாழை இலையைக் கிழிப்பதுபோல் பதில் சொல்லிவிட்டு அம்மா அமர்த்தலாய் இருந்துவிட்டாள்.

மணமான புதிதில் இருந்த திறந்த மனத்துடன் பாஸ்கரனிடமே இதைப் பற்றிச் சொன்னாள் சாயா. "அவள் என்ன நினைச்சாலும் நெனச்சுக்கட்டும். எனக்கு உங்களைப் பிடிக்கிறது" என்றாள்.

"உப்பு பெறாத விஷயம்" என்றுவிட்டான் பாஸ்கரன்.

தனக்கு அவனைப் பிடிக்கிறது என்று அவள் அழுத்திச் சொன்னது கூட உப்புப் பெறாத விஷயமா என்று அவள் எண்ணிக்கொண்டாள்.

பிறகு பல நாட்கள் இந்தச் சம்பவத்தைப் பற்றி அவள் எண்ணிய துண்டு. சமையலறையின் இருட்டு மூலையில் அமர்ந்துகொண்டு தலைக்கு மேலே வெறித்த கண்களுடன் பார்த்துக்கொண்டிருக்கும் அம்மாவின் உருவம் உறங்கக் கண் மூடும் முன்போ, நடுப்பகல் தனிமையில் உட்கார்ந்துகொண்டு தைக்கும்போதோ மனக்கண் முன் திடீரென்று தோன்றும்.

பூமாவைத் தேடிக்கொண்டு சென்றாள். பூமா அவள் அறையில் படித்துக் கொண்டிருந்தாள்.

"என்ன பூமா, படிப்பா, பாவனையா?"

"பாவனை என்ன மண்ணாங்கட்டி!"

"எங்கே விஷயம் எல்லாம் வெளிலே வரட்டும் பார்க்கலாம்?"

"என்ன பிரமாத விஷயம்? சாயங்காலம் வரப் போறார் பாரேன்."

"வரப் போறது யாரு? எனக்குத் தெரிஞ்சவரா, தெரியாதவரா?"

"உனக்குத் தெரிஞ்சவர். அப்பா அம்மாவுக்குத் தெரியாதவர்."

"ஈஸ்வரனா?"

பூமா தலை அசைத்தாள்.

"அடி பாவி! நில்லு, நில்லு எல்லாத்தையும் சொல்லியுடறேன்."

"ஏன்? நானாவது சந்தோஷமா இருக்கப்படாதா?"

சிரித்துக்கொண்டேயிருந்த சாயாவின் முகம் கணத்தில் வாடி விட்டது.

"என்ன சொன்னே பூமா?"

"சும்மா கலாட்டா பண்ணினேன்டீ."

சாயாவும் சிரிக்க முயற்சி செய்தாள். பூமா வேடிக்கைக்காகச் சொல்லவில்லை என்று ஏதோ அவள் மனத்தில் சொல்லியது.

"சாயா இங்கே கொஞ்சம் வாயேன். கூடமாட ஏதாவது செய்யலாம்."

அம்மா அழைத்தாள்.

மைசூர் பாகு கிளற கடலை மாவு எடுத்து, மற்ற சில்லறை வேலைகளைச் சாயா கவனித்துக்கொண்டிருந்தபோதுதான் சேகர் உள்ளே ஓடிவந்தான், ஐந்தாறு தோழர்களுடன்.

"அம்மா, ஐஸ்க்ரீம் வண்டி வரதும்மா. வாங்கித்தாயேன்."

"ஐஸ்க்ரீம் எல்லாம் தின்கக் கூடாது. போ."

"குழந்தை ஆசையாக் கேக்கறான். வாங்கித்தாயேன்" என்றாள் அம்மா.

"நீ சும்மா இரும்மா. அவனுக்கு மட்டும் வாங்கினா போறுமா? எல்லாருக்கும் வாங்க வேண்டாமா?" என்று சிடுசிடுத்தாள் சாயா. அவளுக்கு அன்று காரணமில்லாமல் ஆத்திரமும் அழுகையும் வந்தன.

அம்மா குனிந்து கிளறிக்கொண்டிருந்தவள் தலையை நிமிர்த்தி ஒருமுறை விழித்தாள். கரண்டியை அவள் கையில் தந்து விடுவிடுவென்று அலமாரிப் பக்கம் போய், டப்பாவில் வைத்திருந்த ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து சேகர் கையில் தந்தாள். "போடா, நீயும் வாங்கிண்டு எல்லாருக்கும் வாங்கித்தா. போ."

சேகர் அம்மாவைப் பார்த்தான்.

"வாங்கிண்டு போயேன். பக்கி ஜன்மம். எதைப் பார்த்தாலும் தின்கணும். உடம்பெல்லாம் வயிறுதான். போ. தொலை. கொட்டிக்கோ."

சேகர் ஐந்து ரூபாய்த் தாளைக் கீழே போட்டுவிட்டு. "திட்டாதேம்மா" என்றான் ஏக்கத்துடன். அழுகையின் ஆரம்ப கட்டத்தில் அவன் இருந்தான்.

"என்ன பேச்சடி சாயா இது! குழந்தையை இன்னதுதான் சொல்றதுன்னு கிடையாதா? வாங்கிக்கச் சொல்லு ரூபாயை."

சாயா பதில் சொல்லவில்லை.

"இந்தாடா சேகர், அம்மா வேலையா இருக்கா. நீ வாங்கிக்கோ. திட்டமாட்டாள். ஜில் ஐஸ்க்ரீம் தின்னுட்டு பாட்டியை வந்து தொடு பார்க்கலாம். பாட்டிக்கு ஆசையா இருக்கு. போடா"

சேகர் போனான்.

"வர வர உனக்கு என்ன ஆயிடுத்து? இருப்பது அருமையா ஒரு பிள்ளை. அவனை சந்தோஷமா வச்சிக்க தெரியலை. என்ன பெண்ணோ நீ."

"எல்லாம் நான் வளர்க்கிறபடி எல்லாரும் வளர்த்தால் போறும். உபதேசம் என்ன, எல்லாரும் செய்வேள். என் கஷ்டம் எனக்குத் தெரியும்."

அதற்கு மேல் அம்மா பேசவில்லை.

சாயாவிடம் கோபமில்லை என்று காட்ட எதை எதையோ பேசினாள். சாயாவின் வாடிய முகம் வாடியதுதான். கடைசியில் அம்மாவுக்குப் பொறுக்கவில்லை.

"இந்தா சாயா, இங்கே எப்போதோ வராய். அப்பவும் முகத்தைத் தூக்காதே. கோவமா இருக்கிறபோதும் அழகாத்தான் இருக்காய்."

"போம்மா நீ" என்று விட்டுச் சிரித்துவிட்டாள் சாயா.

"போய் பூமாவை நல்ல புடவை கட்டிக்கச் சொல்லு. நேரமா யிடுத்து பார்."

சாயா எழுந்து போனாள்.

பூமாவுக்கு அலங்காரம் செய்த பிறகு சாயா முகம் கழுவப் பின் பக்கம் போனாள்.

வாசலில் பால்காரனோ, தயிர்க்காரனோ குரல் கொடுப்பது காதில் விழுந்தது.

முகத்தை நன்றாகப் பச்சை ஜலத்தில் களைப்புத்தீர அலம்பிவிட்டு வீட்டுக்குள் வந்தாள். பூமா அறையில் இருந்த துண்டை எடுக்கப் போனபோது, அம்மாவும் பூமாவும் ஏதோ பேசிக்கொள்வது கேட்டது. அவள் பெயரும் அடிபடவே வெளியேயே நின்றாள்.

"என்னடி பூமா, குப்பு கடன் கேட்கறானே? அப்பா சாவியை எடுத் துண்டு போயிட்டார். சாயாகிட்டே இருக்கான்னு கேட்கட்டுமா?"

"போம்மா. ஐஸ்க்ரீம் வாங்கவே அவள் பிரமாதமாய்க் கத்தினாள். நான் இங்கேருந்து கேட்டுண்டுதான் இருந்தேன். அவள் பழைய சாயா இல்லை. மாறிப்போயிட்டாள். அவனை நாளைக்கு வரச் சொல்லு."

வெளியே நின்றுகொண்டிருந்த சாயாவின் கால்கள் நடுங்கின. பூமாவா பேசுகிறாள்?

முகத்தை நனைத்த தண்ணீர்த் துளிகளோடு வியர்வைத் துளிகளும் பெருகிக் கலந்தன. அம்மா வெளியே வரும் முன் புடவையிலேயே முகத்தைத் துடைத்துக் கொண்டு சமையலறைக்கு விரைந்தாள்.

சாமான் அறையிலிருந்த உடைந்த சின்னக் கண்ணாடியை வைத்துக்கொண்டு தலையை வெறுமனே வாராமல் பின்னிக்கொண் டாள். ஸ்வாமி முன் வைத்த குங்குமத்தை இட்டுக்கொண்டாள்.

அம்மா உள்ளே வந்து, "சாயா நீ வேறு உடுத்திக்கலையா? நேரமாச்சே?" என்றாள்.

"எனக்கு இது போறும்மா. என்னையா பெண்பார்க்க வரா" என்றுவிட்டாள் சாயா.

அவளும் நன்றாக உடை அணிந்துகொண்டு பூமாவின் மனம் கவர்ந்தவனிடம் கேள்விகள் கேட்டு அவனைத் திணற அடிக்கவேண்டும் என்று எண்ணியதெல்லாம் அவளுக்குப் புளித்துவிட்டது. அவளுடைய பூமா இல்லை இது.

அப்பாவின் பேச்சுச் சத்தம் வாசலில் கேட்டது. அவர்கள் எல்லோரும் வந்துவிட்டனர் போலும்.

சமையலறை ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். அவள் முன்பே பார்த்திருக்கும் ஈஸ்வரன்தான். இன்று ஏனோ அவன் புதுக்களையுடன் காட்சியளித்தான். பூமாவையும் அவனையும் இணைத்துப் பார்த்தபோது, அந்த ஜோடிப் பொருத்தம் அவளை அசந்துபோக வைத்தது. அவளையும் அறியாமல் அவள் மனம் சேகர் உடைத்த அந்தப் புகைப்படத்தை எண்ணிக்கொண்டது. தனக்கு அருகே அதில் பருத்த சரீரத்தோடு நிற்கும் பாஸ்கரனையும், இந்த ஈஸ்வரனையும் மனம் ஒரு முறை ஒப்பிட்டுப் பார்த்தது. சமைய லறையின் இருட்டில் அம்மாவின் வெறித்த பார்வை நெஞ்சு மூலையில் சித்திரமாய்த் தோன்றியது. தலை வலிக்க ஆரம்பித்தது. இவளைப் பார்த்த அப்பா, கூப்பிட்டு எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைத்தார். மரியாதைக்காகக் கொஞ்ச நேரம் அமர்ந்துவிட்டு எழுந்து வந்துவிட்டாள். தலைவலி அதிகமாகிவிட்டது போல் தோன்றியது. ஜில்லென்று காற்றுப் பட்டால் சரியாகப் போகும் என்று எண்ணியவளாய் மெல்லப் பின்பக்கம் சென்று தோய்க்கும் கல்லின் மீது அமர்ந்துகொண்டாள். தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது. இருட்டு மெல்லக் கவியத் தொடங்கிய வேளையில் குல்லென்று படர்ந்து கிடக்கும் அரளிச் செடி, மணம் சிந்த ஆரம்பித்து விட்ட பவள மல்லிகை, பூத்து அலுத்துவிட்ட காசித்தும்பை இவற்றின் மேல் கண்கள் அயர்வோடு ஓடி, குலை தள்ளிய வாழையின் மேல் நிலைத்த போது அவளை அந்தகாரம் சூழ்ந்துகொண்டது.

மூடிய விழிகளின் இருட்டினுள், வால் நட்சத்திரம் போல் ஒன்று வேகமாகச் சுழன்றது. சிவப்பும் பச்சையும் நீலமுமாய் மத்தாப்புச் சுடர்கள் அதனின்றும் கொட்டின. அதன் ஒளி பிரகாசமாய் இருந்ததே ஒழிய, அவள் கண்ணினுள் அது தகிக்கவில்லை. பூவின் இதழ்களாய் அவை மெத்தென்று விழுந்தன. மென்மை இதழ்கள். சிறு குழந்தையின் ஸ்பரிசம் போல் இதமாக இருந்தன அவை. பஞ்சால் ஆனவை போல் அவை எல்லாம் அங்கும் இங்கும் பறந்து பிறகு சேர்ந்துகொண் டன. அந்தக் குவியலின் ஒளிக்கு இடையே திடீரென இரு கருநீல விழிகள் தோன்றின. பிறகு அவை மறைந்து ஸெலுலாயிட் பொம்மை யுடையதைப்

போல் குண்டு குண்டாக இரு கைகளும், வெண் சங்கைப் போல் அழகுத் தொப்பையுமாய் ஒரு வடிவம் தோன்றியது. மீண்டும் வால் நட்சத்திரம் சுழல ஆரம்பித்தது.

"போறும், போறும். எனக்குத் தாங்க முடியலை" என்று அவள் வாய் அரற்றியது.

"சாயா..." எங்கோ வெகுதூரத்தில் அம்மாவின் குரல் வெறும் காற்றின் ஒலியாய் வந்து செவியைத் தாக்கியது.

"அம்மா ஆ ஆ ஆ..." ஒலியுடன் கூடிய நீண்ட விம்மலாய் அச் சொல் நெஞ்சத்தின் அடியிலிருந்து பெரும் சீறலுடன் அலையாய்ப் பொங்கி வந்தது.

"அடி பெண்ணே, என்னடி ஆச்சு உனக்கு?"

மலர் மாலைகளாய் இரு கைகள் அவளைத் தூக்கின. தோய்க்கும் கல் அருகே அம்மா மடியில் இருப்பது புரிந்தது.

துணி உதறுவதைப் போல் அடி வயிற்றில் பிரம்மாண்ட அசைவுகள் பிறந்து நெஞ்சில் முட்டின. தொண்டை வழியாய் புளித்த காடியாய் நீர் வாயை எட்டியது. 'சட்'டென்று கையால் வாயைப் பொத்திக்கொண்டாள்.

அம்மா அவளைச் சரித்து உட்கார்த்தி வைத்தாள். இதமாய் முதுகைத் தடவினாள்.

ஆயாசத்துடன் அம்மாவின் தோளில் சாய்ந்ததும், அம்மா வாயைத் துடைத்து, "நில்லு, அப்பாவையும் பூமாவையும் கூப்பிடறேன். என் பதட்டத்திலே அவாளைக் கூப்பிடக்கூட இல்லை" என்றாள்.

'வேண்டாம்' என்று வேகமாய்த் தலையை ஆட்டினாள் சாயா. தொண்டையை அடைத்தது.

"அம்மா... நான்..." குரல் உடைந்தது.

"தெரிஞ்சுது. எத்தனாவது மாசம்?"

'தெரியாது' என்று கையை விரித்தாள் அயர்வுடன். அம்மாவின் இடுப்பைச் சுற்றி இரு கைகளையும் போட்டு அணைத்துக்கொண்டு தோளில் சாய்ந்தாள். வெகு நாட்களுக்குப் பிறகு அழுகிறோம் என்று தெரிந்தும் வெட்கமில்லாமல் குலுங்கிக் குலுங்கி அழுதாள். போராடித் தோற்றுவிட்டவளைப் போல் மனம் துவண்டுபோய் அரற்றியவாறே அழுதாள். பெருத்த விம்மல்களுக்கிடையே சொற்கள் தேய்ந்து வெளிப்பட்டன.

"எனக்கு எதுக்கும்மா......இது...? எனக்கு...... ஒன்னும் இல்லேம்மா. அம்மா... நான்... தனிம்மா... எனக்கு விடுதலை இல்லேம்மா..."

“அசடே... என்ன இது?” அம்மாவின் தொண்டை கரகரத்துப் போய்விட்டது.

“பூமா... நான்... மாறிப் போயிட்டேன்னு சொன்னாளேம்மா... நான் என்னம்மா பண்ணுவேன்?... அம்மா...... எனக்குப் பணப் பைத்தியத்தை...... உண்டாக்கிட்டாரேம்மா...... அம்மா... எனக்கு ஏம்மா கல்யாணம் பண்ணினேள்...?” சம்பந்தா சம்பந்த மில்லாமல் நசுங்கிய சொற்கள் வெளிப்பட்டன.

“என்னடீ சாயா, என்னென்னவோ பேசறே?” பதைத்த குரலில் அம்மா கேட்டாள் பலமாக.

பொட்டில் அடித்தாற்போல் அந்தக் குரல் அவளைத் தன் வசத் துக்குக் கொண்டு வந்தது.

மடமடவென்று எழுந்து கண்களைத் துடைத்துக்கொண்டாள். மெல்லிய குரலில், “ஏதாவது உளறினேனாம்மா? களைப்பு அவ்வளவு தான்” என்று அவசரமாய்ப் பேசினாள்.

“சாயா, மனசுலே என்னவோ வெச்சுண்டு சொல்லமாட்டேங் கறாய்” என்றாள் அம்மா.

“ஒன்னும் இல்லேம்மா. வெய்யிலில் வந்த களைப்பு. இந்த சமாச் சாரம்னு எனக்கே தெரியலை. தெரிஞ்சா வந்திருக்க மாட்டேன் வெய் யில்லே. அடுப்படியிலே வேற நின்னேனா தலையைச் சுத்திண்டு வந்தது. யாருகிட்டேயும் சொல்லாதே. வா.”

எழுந்து பெண்ணைப் பின்தொடர்ந்து உள்ளே சென்றாள் அம்மா. சாயாவின் கண்ணீரால் நனைக்கப்பட்ட ரவிக்கையின் தோள் புறத்தை ஒருமுறை தொட்டுப்பார்த்துக்கொண்டாள். அந்த ஈரம் பல உள்ளங்களில் இருந்தால் என் சாயா இப்படி இருக்கமாட்டாளே என்று எண்ணிக்கொண்டாள்.

சாயா மீண்டும் முகத்தை அலம்பிக்கொண்டு, சேகரை அழைத் தாள்.

“சேகர்... வாடா...”

அறைக்குள்ளிருந்தே குரல் கொடுத்தாள். அப்பா, “மெதுவாய் போம்மா. ஜாக்கிரதை” என்றார் வழக்கம் போல்.

அம்மா வாசல்வரை வந்தாள். தோட்டக் கதவருகே வந்ததும் சாயா வின் தோளில் கை வைத்து “போயிட்டு வா” என்றாள் பெருமூச் செறிந்தவாறே.

அவள் ஓர் அம்மா இல்லையா, அவள் அழுகையின் காரணம் அவளுக்குப் புரிந்துவிட்டது.

சாயா தலையை அசைத்துவிட்டு நடந்தாள்.

அம்மா தன்னைப் புரிந்துகொண்டது அவள் தாயாக இருப்பதால் மாத்திரம் இல்லை என்று அவளுக்குப் பட்டது. அம்மாவும் அவள் மாதிரிதான். வீட்டின் மூலையில் இன்னமும் மெட்டுக் கலைந்து, தந்தி அறுந்து, மணலில் விளையாடிய குழந்தை போல் தூசி படர்ந்து இருக்கும் வீணை அவளுக்கு நினைவு வந்தது.

அம்மா ரொம்ப நன்றாக வீணை வாசிப்பாளாம். மணமான புதிதில் தினமும் மாலை அப்பா வேலையிலிருந்து திரும்பி வரும்வரை வாசிப்பாளாம்.

ஒருநாள் பக்கத்து வீட்டிலிருந்து ஒரு கிழக்குரல் அவளைக் கூப் பிட்டது.

"அம்மா, போன ஜன்மம் ஸ்வாமிக்குத் தேனாபிஷேகம் செய் திருப்பே. வாசிக்கிறது தேன் சொட்டறதும்மா. தினம் எனக்காக வாசி" என்றாராம் அவர்.

அம்மாவுக்கு அப்போது வயது பதினைந்து. "காமு, சஹானா வாசி யேன். அஞ்சாவது சங்கதிலே இழைச்சு வாசி" என்று கேட்டு ரஸித்த அவள் தந்தையைப் பிரிந்த சோகம் வேறு. பக்கத்து வீட்டுக் கிழவருக்கு அவள் தினம் கச்சேரியே செய்தாள்.

ஒரு நாள் மாலை, திருப்புகழ் ஒன்றை அதிகப்படியாக வாசித்துக் கொண்டிருந்த வேளையில் அப்பா வந்துவிட்டாராம். அம்மா பாட்டை முழுவதும் பாடி முடித்து விட்டுத்தான் எழுந்தாளாம்.

கிழவர் போனவுடன் அப்பா அம்மாவை அழைத்து "நீ யாரைக் கல்யாணம் செய்துண்டிருக்கே?" என்றாராம்.

"ஏன் உங்களைத்தான்" என்றாளாம் அம்மா ஒன்றும் புரியாமல்.

"உன்னோடுதெல்லாம் எனக்கு மட்டும்தான் சொந்தம். தெரியுமா? கண்டவனுக்கெல்லாம் வீணை வாசிக்க வேண்டாம். எனக்கு நீ வாசிச்சா போறும்."

அம்மாவுக்குச் சிரிப்பு வந்ததாம்.

"ஹரிகாம்போதியையும் மோஹனத்தையும் சேர்த்துப் பாடினால் என்ன?" என்று கேட்கும் இவருக்கு அவள் வீணை வாசிப்பதா?

அன்று அவர் தூங்கியதும் வீணையின் தந்தியை அவள் அறுத்து விட்டாளாம். தன் தாலியை அறுத்தெறிவதுபோல் தோன்றியதாம். அன்று முதல் அவள் வீணையைத் தொடவில்லை. சாயாவிடம் இதைப் பற்றி அம்மா சொல்வாள்.

"எப்படீம்மா முடிஞ்சுது உன்னால்?"

அமலங்கலமாய் இருக்கும் வீணையைப் பார்த்து அம்மா பெரு மூச்செறிந்துவிட்டுச் சிரிப்பாள்.

"முடிஞ்சுது அப்போ. இப்போ வீணையைத் தொட்டா பித்தாப் போயிடுவேன். இவ்வளவு நாள் தொடாமல் இருந்த வைராக்யம் பொடிஞ்சு போயிடும்."

தினம் தினம் வீணையைப் பார்த்து ஏங்கிய அந்த மனம் தன் மகள் வேதனையைப் புரிந்துகொண்டிருக்கும். அப்போது தனக்கு இருந்த ஒரே தோழி தன் தாய்தான் என்று அவளுக்குப் பட்டது. சேகருடன் வந்து திருவல்லிக்கேணி செல்லும் வண்டிக்காகக் காத்து நின்றாள்.

இன்னும் சில மாதங்கள் போனால் தைக்க முடியாதே என்ற எண்ணமும், கணவனிடம் சொன்னால் டாக்டருக்கும், நர்சுக்கும் பணம் யார் அழுவது என்று அவன் கடிவானே என்ற உணர்வுமே மனத்தை அடைத்துக்கொண்டிருந்தது.

அவள் கற்பனைகள்! "ஸ்வப்ன உலக சுந்தரி" என்றுதான் கல்லூரி யில் அவளுக்குப் பெயர். இப்போது அவள் இன்னோர் குழந்தைக்குத் தாயாகப் போகிறாள். அது பெண்ணாகப் பிறந்தால் அவளுக்குப் பிடித்த, பச்சை, சிவப்பு, ஊதா வர்ணங்களில் விதம் விதமாய் உடைகள் தைத்துப் போடலாம் என்று அவளுக்குக் கற்பனை செய்ய முடியவில்லை. ("அம்மா அரை டஜன் குழந்தைகளாவது வேணும்மா" – யார் சொன்னது இப்படி? தானா?"

மருத்துவர் நீட்டப்போகும் பணத்துக்கான சீட்டை அவள் மனம் நினைத்தது. பல மாதங்கள் தைக்காமல் இழக்கப்போகும் தொகையை நினைத்தது. நெஞ்செல்லாம் கொட்டி வைத்த முத்துக்கள், கற்களாய் உருமாறிவிட்டன.

கற்பனை! தன் கற்பனைகளைக் கூட இந்த வாழ்வு காவு வாங்கிவிட்டது.

ஒரு தாயாகப் போகும் உணர்வு கூடவா சாக வேண்டும்? "இது ஏன் ஒரு தொல்லை?" என்று அல்லவா அவளுக்குத் தோன்றியது?

சட்டம் இருக்க வேண்டும். சட்டம் இருக்கத்தான் வேண்டும்.

எதைத் தவிர்க்க?

ஓ, எல்லாவற்றையும் தவிர்க்கத்தான். எல்லா நாசமாய்ப் போகிற விஷயங்களையும் நிறுத்தத்தான்.

வண்டி வந்தது. எண்ணச் சுமையுடனேயே ஏறி, அதனுடனேயே இறங்கினாள்.

சேகரும், அவளும் மெல்ல நடந்தனர்.

வீட்டுக்கருகில் வந்ததும் உள்ளே நுழையவே மனம் மறுத்தது. அப்படியே சேகருடன் நடந்து போய்க் கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றியது.

திடீரென்று பாஸ்கரன் நினைவு வந்தது. தான் போய்விட்டால் எத்தகைய ஆத்ம போராட்டத்தின் பின் தான் போனோம் என்று கூடப் புரிந்துகொள்ள முடியாமல், யாருக்கும் ஏற்படாத கதி தனக்கு வந்ததே என்று எண்ணிக் கலங்கப்போகும் அவனை நினைத்ததும் சிரிப்பு வந்தது. மீண்டும் மணந்தால் செலவாகும் என்று அதுகூடச் செய்துகொள்ள மாட்டார் என்று தொடர்ந்து தோன்றியதும் மனத்தில் அரும்பிய சிரிப்பு உதட்டில் மலர்ந்துவிட்டது.

அவர்களைப் பார்த்ததும் திட்டத் தொடங்கினான் பாஸ்கரன்.

"எங்கே போயிட்டாய் சாயா? பொறுப்பே இல்லை உனக்கு." வேறு எதுவும் இல்லாவிட்டாலும், காசு தராமல் பார்க்கக்கூடிய கோமாளியாகவாவது இருக்கிறானே!

"என்ன, எங்கே போனே?"

"வேப்பேரி." சமையலறைக்கு நடந்தவாறே பதில் சொன்னாள்.

"வேப்பேரியா? போக வர வண்டிச் சத்தம் யார் அழறது?"

நிதானமாய்ச் சொன்னாள். இந்தக் குட்டி நாடகம் அவளுக்குப் பிடித்தது.

"இன்னும் வேற நிறைய சிலவு வரப் போறபோது வண்டிச் சத்தம் பத்தி என்ன கவலை?"

"என்ன? வேற சிலவா என்ன சிலவு?"

"அப்புறமா சொல்றேன்."

"நீயும் உன் ரகஸியமும்!"

இரவு படுக்கையில் அசதியாகச் சென்று படுத்தாள்.

பாஸ்கரன் இன்னும் தூங்கியிருக்கவில்லை.

"ஆமாம், செலவுன்னாயே, என்ன செலவு?"

என்ன சொல்வது என்று தெரியவில்லை. மௌனம் சாதித்தாள்.

"சொல்லேன்."

முதல் தடவை சேகர் பற்றி பாஸ்கரனிடம் சொல்ல அவள் பட்ட வெட்கமும், பரபரப்பும் ஞாபகம் வந்தது. இப்போது அந்தக் குறுகுறுப்போ, நாணமோ இல்லாமல் பதில் சொன்னாள். வார்த்தை

களில் கூட ஓர் அழகோ, அந்தச் செய்திக்கு மதிப்பை அளிக்கும் நயமோ இல்லாமல், காலை இடறும் கல்லைத் தூக்கி எறியும் உதா சீனத்துடன் சொன்னாள்.

“இன்னொரு குழந்தை பிறக்கப் போகிறது.”

மௌனம் அறையில் நிலவியது.

“இது வேற அதிகப்படி சிலவா?” என்று முணுமுணுத்தான் பாஸ்கரன். அதை நினைத்து அவள் கவலைப்படவில்லை. எல்லாமே அவளுக்குப் பழகிவிட்டது. அதிலிருந்து விடுபட வேண்டும் என்ற வேகம்கூட தணிந்து சிறகிழந்த பறவையாய் அவள் படுக்கையில் முடங்கிக்கொண்டாள்.

அவளுக்குத் தூங்க வேண்டும்.

ஏற்படப்போகும் செலவுப் பட்டியலையும், அதை எப்படிப் பின்னால் ஈடு செய்ய வேண்டும் என்பதையும் பாஸ்கரன் சொல்லிக் கொண்டிருந்தான்.

சட்டம்... சட்டம்... சட்டம்... சட்டம்... சாயா தூங்கிவிட்டாள்.

'கணையாழி' மே – ஜூன் 1972